


முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (15.9.2025) சென்னை, கலைவாணர் அரங்கத்தில், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையின் சார்பில், பெற்றோர்கள் இருவரையும் இழந்த மற்றும் பெற்றோரில் ஒருவரை இழந்து, மற்றொரு பெற்றோரால் பராமரிக்க இயலாத குழந்தைகளை அரவணைத்து தொடர்ந்து பாதுகாத்திடும் வகையில், அக்குழந்தைகளின் 18 வயது வரையிலான பள்ளிப் படிப்பு முடியும் வரை இடைநிற்றல் இன்றி கல்வியை தொடர மாதம் 2,000 ரூபாய் உதவித்தொகை வழங்கிடும் “அன்புக்கரங்கள்” திட்டத்தை தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, சமூக நலன் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் திருமதி. பி. கீதா ஜீவன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியம், இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் இ.பரந்தாமன், தாயகம் கவி, துணை மேயர் மு.மகேஷ் குமார், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அரசு செயலாளர் திருமதி. ஜெயஸ்ரீ முரளீதரன் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# தலைமகன் நிமிர்த்திய தமிழ்நாட்டை தலைகுனிய விடமாட்டோம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

சென்னை, செப். 16–

தலைமகன் நிமிர்த்திய தமிழ் நாட்டை தலைகுனிய விடமாட்டோம் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பேரறிஞர் அண்ணா பிறந்த நாளையொட்டி வெளியிட்ட சமூக வலை தளப் பதிவில் பதிவிட்டுள்ளார்.

பேரறிஞர் அண்ணா அவர்களின் 117வது பிறந்த நாளையொட்டி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள பதிவு வருமாறு:–



**தமிழன்னை தந்திட்ட தலைமகன்!**

**திராவிட முன்னேற்றக் கழகம் எனும் நம் உயிரைத் தாயென அளித்திட்ட திருமகன், பேரறிஞர் அண்ணா.**

**தலைமகன் நிமிர்த்திய தமிழ்நாட்டைத் தலைகுனிய விடமாட்டோம்!**

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

### இதுவரை ரூ.6 கோடியே 31 இலட்சத்து 90 ஆயிரம் வழங்கப்பட்டுள்ளது!

### 2012 ஜூன் மாதம் முதல் உதவித் தொகை ரூ. 10 ஆயிரத்திலிருந்து ரூ.20 ஆயிரமாகவும்

### 2013 ஆகஸ்ட் மாதத்திலிருந்து ரூ. 25 ஆயிரமாகவும் உயர்த்தி வழங்கப்படுகிறது!

# கலைஞர் கருணாநிதி அறக்கட்டளை சார்பில்

# நலிந்தோர் - மருத்துவம் உதவி நிதியாக

# இன்று ரூ.2,00,000/- கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

கலைஞர் கருணாநிதி அறக்கட்டளைக்காக, தலைவர் கலைஞர் அவர்கள் தனது சொந்த பொறுப்பில் அளித்த ஐந்து கோடி ரூபாயினை வங்கியில் வைப்பு நிதியாக போடப்பட்டு, அதில் கிடைக்கப்பெறும் வட்டித் தொகையினைக் கொண்டு, மாதந்தோறும் ஏழை எளிய நலிந்தோர்க்கு உதவித் தொகையாக 2005 நவம்பர் மாதம் முதல் 2007 ஜனவரி மாதம் வரை வழங்கப்பட்டு வருகிறது.

வைப்பு நிதியாக போடப்பட்ட ஐந்து கோடி ரூபாயில், 30வது புத்தகக் கண்காட்சியினை 10.1.2007 அன்று திறந்து வைத்து தலைவர் கலைஞர் பேசுகையில், கலைஞர் கருணாநிதி அறக்கட்டளை சார்பில், தென்னிந்திய புத்தக விற்பனையாளர் – பதிப்பாளர் சங்கத்துக்கு ஒரு கோடி ரூபாய் வழங்கப்படும் என அறிவித்து அச்சங்கத்துக்கு வழங்கியது போக மீதமுள்ள நான்கு கோடி ரூபாயிலிருந்து வரும் வட்டித் தொகையில் 2007 பிப்ரவரி முதல் தொடர்ந்து உதவித் தொகை வழங்கப்படுகிறது.

2005 நவம்பர் முதல் இதுவரை வழங்கிய நிதி **ரூ. 6 கோடியே 31 லட்சத்து 90 ஆயிரம்**. இந்த மாதம் நலிந்தோர் மற்றும் மருத்துவம் உதவி நிதியாக மொத்தம் **8** பேருக்கு தலா ரூபாய் 25 ஆயிரம் வீதம் மொத்தம் **ரூ.2,00,000/- (இரண்டு லட்சம்)** 15–09–2025 அன்று கழகத் தலைவர் **மு.க.ஸ்டாலின்** வழங்கினார். நிதி பெறுவோர் வெளி மாவட்டங்களிலிருந்து வந்துபோகிற செலவினத்தை தவிர்ப்பதற்காக தபால் மூலம் வரைவுக் காசோலையாக அனுப்பப்படுகிறது.

## நிதி உதவி பெறுவோர் விவரம்

| | | |
|---|---|---|
| 1. | கே.காந்தி, தளவாய் – அஞ்சல், செந்துறை ஒன்றியம், அரியலூர் மாவட்டம். | 25,000/–– |
| 2. | பி. சுகுமார், மேங்காட்டு தெரு, சங்கர்நகர், பசுபதிபாளையம், கரூர் மாவட்டம் | 25,000/– |
| 3. | வி. முத்துரங்கன், நடுத் தெரு, எடப்பாடி, சேலம் மாவட்டம் | 25,000/– |
| 4. | எஸ். பழனிசாமி, 8வது வார்டு, குமாரபாளையம், நாமக்கல் மாவட்டம். | 25,000/– |
| 5. | சே. சொர்ணம், சிக்களூர் அஞ்சல், அரூர் தாலுக்கா, தருமபுரி மாவட்டம். | 25,000/– |
| 6. | கோ. ராஜ்மோகன், கிழக்கு வீதி, கள்ளிமடை, சிங்காநல்லூர், கோவை | 25,000/– |
| 7. | பி.கணேசமூர்த்தி, நடுப்பாளையம், குருமந்தூர் அஞ்சல், ஈரோடு மாவட்டம். | 25,000/– |
| 8. | எஸ்.பாக்கர்அலி, பொன்நகர், பொல்லிக்காளிபாளையம், பல்லடம், திருப்பூர். | 25,000/– |
| | **மொத்தம்** | **ரூ.2,00,000/-** |

